## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 253/2008

Deposition of **P.W.2** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 02.12.2024 in accordance with the provision of Act 1 of 1873.

Name : சுப்ரமணி Father's Name : முத்துசாமி

துவக்க நேரம்: 11.35 A.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் என் மனைவி மீனாட்சிக்கு பாத்தியப்பட்டது. தாவா சொத்து யார் மூலமாக என் மனைவிக்கு கிடைத்தது என்றால் ஆரம்பத்தில் அருணாச்சல நாயக்கருக்கும், அதன்பிறகு கருப்பாயி அம்மாளுக்கும் பாத்தியப்பட்டது. அதன்பிறகு கருப்பாயியம்மாளின் மகன் வழி பேத்தியான எனது மனைவிக்கு பாத்தியப்பட்டது.

2) தாவா சொத்தை கடந்த 1917-ம் ஆண்டு எழுதப்பட்ட பத்திரத்தின் அடிப்படையில்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 1963-ல் எனது மனைவி மீனாட்சிக்கு எழுதிவைக்கப்பட்டுள்ள பத்திரத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் நான்கு எல்லைகள் தெரியுமா என்றால் தெரியும்.

3) கடந்த 1917-ம் பத்திரத்தின்படி தாவா சொத்தின் நான்கு எல்லைகள் தெரியுமா என்றால் தெரியாது, தற்போதைய புதிய நான்கு எல்லைகள் தெரியும்.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.253/2008, Dt.02.12.2024.

தற்பொழுதுள்ள தாவா சொத்தின் செக்குபந்தி சொல்ல முடியுமா என்றால் முடியும். செல்வராஜ் வீட்டிற்கும் வடக்கிலும், பழனியம்மாள், அய்யாக்கண்ணு வீட்டிற்கும் தெற்கிலும், சேக் இஷ்மாயில் வீட்டிற்கு கிழக்கிலும், பூசாரி வீட்டின் சந்திற்கும் மேற்கிலும், தாவா சொத்து உள்ளது. அந்த சந்தில் 4-வது வீடு தாவா சொத்து.

4) ஆறகளூர் கிராமத்தில் தேரோடும் வீதி தென்வடலாக செல்கிறது என்றால் சரிதான். ராஜவீதி என்பது கிழமேலாக நடுவில் செல்கிறது என்றால் சரிதான். ராஜவீதியின் முடிவில் மேலவீதி அல்லது சௌடஸ்வரர் கோவிலின் தெரு தென்வடலாக செல்கிறது என்றால் சரிதான்.

5) தாவா சொத்து ராஜவீதிக்கு தெற்கில் அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் வடக்கில் தோட்டம் உள்ளது என்றால் இல்லை. தாவா சொத்தின் சம்மந்தமாக சர்வே எண், பட்டா எண் தெரியுமா என்றால் பட்டா எண். 566, ச.எண்.191/18 ஆகும். தாவா சொத்து தொடர்பான பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் வில்லங்கச் சான்று சமர்ப்பித்துள்ளேன்.

6) தாவா சொத்து தற்பொழுது யார் சுவாதீனத்தில் உள்ளது என்றால் பிரதிவாதிகள் முத்துசாமியும், செந்தாமரை சுவாதீனத்தில் உள்ளது. எங்களை அடித்துப்போட்டுவிட்டு உள்ளே நுழைந்துவிட்டார்கள். தாவா சொத்தில் பிரதிவாதிகள் மாடி வீடு கட்டி குடியிருந்து வருகிறார்களா என்றால் ஆமாம்.

7) தாவா சொத்து சம்மந்தமாக பட்டவோ, வீட்டுவரி ரசீதோ என் பெயரில் உள்ளதா என்றால் வில்லங்கச் சான்றும், பத்திரமும் என் பெயரில் உள்ளது. தாவா சொத்து சம்மந்தமாக RDO போட்ட உத்தரவை எதிர்த்து DRO-விடம் சென்றபொழுது DRO,

அவர்கள் RDO-வின் உத்தரவை ரத்து செய்துவிட்டு, நீதிமன்ற உத்தரவுக்கு உட்பட்டது என்று உத்தரவிட்டுள்ளார் என்றால் ஆமாம்.

8) தாவா சொத்து வீட்டு மனை என் பெயரில் இல்லை என்றாலும் பிரதிவாதிகள் பெயரில் இதுவரை பட்டா இருந்து வருகிறது என்றாலும் அந்த பட்டாவை இன்றுவரை ரத்து செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. அது UDR-திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டது. UDR திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பட்டா செல்லத்தக்கதல்ல என உச்சநீதிமன்றம் சொல்லியுள்ளது.

9) தாவா சொத்து கடந்த 70 வருடங்களுக்கு முன்பு பிரதிவாதிகள் தாயார் அழகம்மாள் பெயரில் இருந்தது என்றால் சரியல்ல. அது பொய்யாக தயாரிக்கப்பட்டது. தாவா சொத்தில் அழகம்மாள் உயிருடன் இருக்கும்வரையில், அழகம்மாளும் பிரதிவாதிகளும் சேர்ந்து இருந்துவந்தார்கள் என்றாலும், அழகம்மாள் இறந்தபிறகு பிரதிவாதிகள் தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல, தொடர்ந்து நாங்கள்தான் குடியிருந்து வருகிறோம்.

10) சின்னசாமியும், முத்துசாமியும் அண்ணன் தம்பி என்றால் சரிதான். தாவா சொத்தில் சின்னசாமிக்கு பாதிபாகமும், முத்துசாமி பாதிபாகமும் உள்ளது என்றால் சரியல்ல. அவர்களுக்கு சொத்தில் உரிமை இல்லை. எங்களை வலுகட்டாயமாக வெளியே இழுத்துபோட்டுவிட்டு அவர்கள் வீடு கட்டிக்கொண்டார்கள். தாவா சொத்தில் அவர்களுக்கு பத்திரத்தின் அடிப்படையில் எந்த உரிமையும் இல்லை.

11) கடந்த 30.04.2007 அன்று சின்னசாமி வகையறா அவரது பாக சொத்தை செந்தாமரைக்கு பதிவு செய்யப்பட்ட கிரையபத்திரம் மூலம் விற்றுவிட்டார் என்றால் சரியல்ல.

அவர்களுக்கு எழுதிக்கொடுக்க உரிமை இல்லை. தாவா சொத்தை பொறுத்து ஏற்கனவே முத்துசாமிக்கு பாதிபாகமும், தற்பொழுது கிரையம் பெற்ற வரையில் செந்தாரைக்கு பாதிபாகமும் உள்ளதால், முத்துசாமிக்கும், செந்தாமரைக்கும் முழுமைக்கும் தாவா சொத்து பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.பட்டா, வீட்டுவரி ரசீது ஆகியவை பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. அவை போலியானவை.

12 ) கடந்த 1917-ம் ஆண்டு பத்திரத்தில் ஒரு செக்குபந்தியும், கடந்த 1963-தேதியிட்ட பத்திரத்தில் ஒரு செக்குபந்தியும், வழக்கில் மூன்று வெவ்வேறான செக்குபந்திகள் நாங்கள் குறிப்பிட்டுள்ளோம் என்றாலும் எங்களுக்கு சொத்து எங்கு உள்ளது என்றே தெரியவில்லை என்றாலும் சரியல்ல. கடந்த 1917-ல் பத்திரத்தில் செக்குபந்தியில் காட்டப்பட்டிருந்த நபர்கள் அனைவரும் இறந்துவிட்டார்கள். கடந்த 1963 பத்திரத்தில் செக்குபந்தி காட்டப்பட்டுள்ளது.

13) பிரதிவாதிகளை மிரட்டி வழக்கு போட்டுள்ளேன் என்றாலும், இந்த வழக்கில் எனக்கு எந்தவித பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு எந்தவிதமான பதிவு செய்யப்பட்ட பத்திரமும் இல்லை.

<u>வாதிகள் தரப்பில் மறு விசாரணை:</u>

1) எந்த தெருவிலிருந்து நான்கு வீடு தள்ளி தாவா சொத்து உள்ளதாக நான் குறிப்பிடுகிறேன் என்றால் ராஜவீதியிலிருந்து தெற்கு பக்கமாக வரும் சந்தில் கிழக்கு பார்த்தவாறு அமைந்துள்ள நான்காவது வீடு ஆகும்.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.253/2008, Dt.02.12.2024.

பிரதிவாதி தரப்பில் மறுவிசாரணையின் பேரில் குறுக்கு விசாரணை இல்லை.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முழுவதுமாக முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.

முடிவு நேரம்: 12.20 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-S.Munusamy
Principal Distrit Munsif, Attur

Typed by Selvi. C. Sasikala - O.S. No.253/2008, Dt.02.12.2024.